

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை பழைய பேருந்து நிலைய பகுதியில் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் அமைக்கப்பட்டிருந்த கலைஞர் நூலகத்தை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தனுஷ் குமார், துணை அமைப்பாளர்கள் தங்கம், ரவிக்கண்ணன் பாபுஜி, பாசறை ஆனந்த், கார்த்தி, நகர் மன்ற தலைவர் சுந்தர் லட்சுமி சிவப்பிரகாசம், நகர செயலாளர் ஏ.கே.மணி, ஒன்றிய செயலாளர் பாலகணேசன், பொன்ராஜ், மாநில நெசவாளர் அணி பழனிசாமி ஆகியோர் கலந்து கொண்டனர் .



சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை இயக்குநர் அலுவலக வளாகத்தில் நேற்று (21.11.2024) நடைபெற்ற “உலக மீன்வள தின” விழாவில் மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் ஒருங்கிணைந்த வண்ண மீன் வளர்ப்பிற்கான மானிய விலையில் பயனாளிகளுக்கு குளிர்காப்பு பெட்டி பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்ய பிரதா சாகு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை இயக்குநர் திருமதி இரா. கஜலட்சுமி, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அலுவலர்கள், மீனவர்கள், மீன்வளர் போர், மீனவர் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலை!

# 'கலைஞர் 100 வினாடி - வினா' மாபெரும் இறுதிப் போட்டி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசு வழங்கி சிறப்புரை!

சென்னை, நவ. 22 -

திராவிட இயக்க வரலாறு, முத்தமிழறிஞர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கழக மகளிர் அணி சார்பில், கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் முன்னெடுப்பில் மாபெரும் அறிவுத் திருவிழாவாக 'கலைஞர் 100 வினாடி வினா' போட்டிகள் 12 மண்டலங்களாக நடைபெற்று வந்தது.

கலைஞர் வினாடி-வினா இன்று (நவம்பர்-22) காலை 9 மணியளவில் அரையிறுதிப் போட்டி அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

கலைஞர் 100 வினாடி-வினா மாபெரும் இறுதிப் போட்டி நாளை (23.11.2024 – சனிக்கிழமை) காலை 9 மணியளவில் சென்னை - அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசு வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் தொடக்கவுரையாற்றுகிறார். கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை கழக தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் தொகுத்து வழங்குகிறார். கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் பா.ராணி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், காரல் மார்க்ஸ், சித்திரமுகி சத்யவாணி முத்து, வாசுகி ரமணன், காயத்ரி சீனிவாசன், குமரி விஜயகுமார், தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., பவானி ராஜேந்திரன், மலர் மரகதம், அங்கையற்கண்ணி, சத்யா பழனிகுமார், சேலம் சுஜாதா, ரேகா பிரியதர்ஷினி, விஜிலா சத்யானந்த், மாலதி நாகராஜ், ராணி ரவிச்சந்திரன், அமலு விஜயன் எம்.எல்.ஏ., மாலதி நாராயணசாமி, மோ. தேன்மொழி, உமா மகேஸ்வரி, ஜெசி பொன்ராணி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., அ.ரியா, யாழினி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

### ‘கலைஞர் 100 வினாடி வினா’ இறுதிப்போட்டி: முதல்வர் பரிசு வழங்குகிறார்!

# கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணியினர் திரண்டு வாரீர்!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் – நாமக்கல் பா.இராணி வேண்டுகோள்!

சென்னை, நவ. 22 -

கழக மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் பா.ராணி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் முன்னெடுப்பில் திமுக மகளிர் அணி சார்பில் திராவிட இயக்க வரலாறு, திமுகவின் வரலாறு, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் மாபெரும் அறிவுத் திருவிழா 'கலைஞர் 100 வினாடி வினா' போட்டி 12 மண்டலங்களாக நடைபெற்றது.

இன்று (நவம்பர் 22ஆம் தேதி) அரையிறுதி போட்டியும். நாளை (23 ஆம் தேதி) மாபெரும் இறுதிப் போட்டியும் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வினாடி - வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

தொடக்க உரையை கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பனும் வரவேற்புரையை கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சனும், நன்றியுரையை கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.இராணியும் ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை கோவி லெனின் தொகுத்து வழங்குகிறார்.

இதில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். அனைவரும் வருகை தர அழைக்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

| |
|---|
| இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 1512B / 2024<br>5 எண்ணிக்கையில் Truck Mounted Crane-கள் 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்தல் |
| முன்வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி |
| ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 05.12.2024 பிற்பகல் 3.00, மணி |
| ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் 06.12.2024 பிற்பகல் 3.30 மணி |
| மேலும் விவரங்களுக்கு : https://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம். |

செ.ம.தொ.இ / 5053 / ஒப்பந்தப்புள்ளி / 2024 — கண்காணிப்பு பொறியாளர் (இ)


### தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில நிர்வாகிகள் - மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் கூட்டம் 25.11.2024 திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் - அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள்;

2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 20.11.2024

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

### கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி சார்பில்

# திராவிட முன்னேற்றக் கழக முப்பெரும் விழா : பேராசிரியர் சுப.வீரபாண்டியன் எழுச்சி உரை!

## மனோதங்கராஜ் எம்.எல்.ஏ. பங்கேற்பு! பாலூர் தேவா தலைமை!

குமரி, நவ. 22-

“கன்னியாகுமரி மேற்கு மாவட்ட திமுக அயலக அணி” சார்பில் தி.மு.க. முப்பெரும் விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. தி.மு. கழகப் பவள விழா, கூட்டுக் குடும்ப விழா மற்றும் நலத்திட்டம் வழங்கும் விழாவாகச் சிறப்பிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் பாலூர் தேவா தலைமை தாங்கினார். மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான மனோ தங்கராஜ் உரையாற்றினார்.

திராவிடர் கழகத் தமிழர் பேரவை தலைவரும், தமிழ்நாடு அரசு சமூக நீதிக் கண்காணிப்பு குழு தலைவருமான பேராசிரியர் சுப. வீரபாண்டியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார் .

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்து விளக்க உரையாற்றினார். இங்கு இஸ்லாம் மதத்தைச் சார்ந்த நசீர் தான் வரவேற்பு குழு தலைவராக இருக்கிறார்கள், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த அருள் தந்தையர்கள் ஜோஸ் ராபின்சன் மற்றும் தனுசுலாஸ் அமர்ந்திருக்கிறார்கள், வாஷிங்டன் சிவா விஷ்ணு போன்ற இந்து சமயத்தைச் சார்ந்த நண்பர்கள் அமர்ந்திருக்கிறார்கள், பெரும் திரளாக இந்து இஸ்லாமிய கிறிஸ்தவச் சமய பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் அமர்ந்திருக்கிறீர்கள், திராவிட மாடல் ஆட்சியில் மதநல்லிணக்கத்திற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்! இதுவே திராவிட முன்னேற்றக் கழகம் வளர்த்த சமூக நீதிக்கு எடுத்துக்காட்டு.

தமிழ்நாட்டிலேயே தோன்றிய இயக்கங்களைக் கணக்கில் எடுத்தால் தமிழ்நாட்டிலேயே தோன்றி தமிழ்நாட்டிலேயே வளர்ந்து தமிழ்நாட்டிலேயே நிமிர்ந்து நிற்கும் இயக்கம், எழுபத்தைந்து ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். கலைஞரின் காலை தோழன் என்று கவிஞர் பலூர் தேவா கூறினார், தோழன் என்று சொல்வதற்குத் தகுதி இல்லை தோளில் வளர்ந்தேன் என்று சொல்வதற்குத் தகுதி உடையவன். கலைஞரின் கடைசிக் காலப் பத்து ஆண்டுகளில் அவரோடு இருந்தது உண்மைதான்.

ஆனால் அவரோடு பயணித்தேன் என்பதை விட, அவரோடு இருந்து அவரைப் படித்தேன் என்பது தான் சிறந்தது. இங்கே அயலகத்தில் இருந்து பல நண்பர்கள் வந்திருக்கிறீர்கள், கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பலூர் தேவா, அமெரிக்கத் திமுகவின் வாஷிங்டன் சிவா போன்ற தோழர்களுக்கு ஒன்றை கேட்டுக்கொள்கிறேன், வருகிற தேர்தலில் ஒவ்வொரு வாக்கும் மிகவும் வலிமையான வாக்கு. ஆகவே இன்றிலிருந்து உங்களை உழைக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். அயலகத்தில் இருக்கும் ஒவ்வொரு தமிழனும் இன்றிலிருந்து வாக்களிக்கும் நாளில் தாயகம் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், பொருளாதாரத்தைச் சேமிக்க வேண்டும், பயணச் சீட்டுகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்படி என்றால் லட்சக் கணக்கான அயலகத் தமிழர்களின் வாக்கு. திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைக்கும்.

இங்கே தமிழ் அறிஞர் தொல்காப்பியருக்கு நினைவாலயம் எழுப்ப வேண்டும் என்று தொல்காப்பிய கழக தோழர்கள் கேட்டார்கள்.

நிச்சயம் இந்தச் செய்தியை உங்கள் மாவட்டச் செயலாளரோடு இணைந்து, முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டு சென்று ஆவன செய்ய முயல்வோம் என பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பேசினார்.

அயலக அணி தலைவர் நசீர் வரவேற்புரை ஆற்றினார். தக்கலை ரவி வரவேற்புரையாற்றினார்.

அயலக விருந்தினர் வாஷிங்டன் சிவா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ரெமோன், மாவட்டத் துணைச் செயலாளர் ராஜ், ஒன்றிய செயலாளர்கள், கோபால், டி.பி.ராஜன், அட்வகேட் ராஜேஷ்குமார், அட்வகேட் ஜான் பிரைட், சைனி கார்டன், வினு குமார், துரைராஜ், பிரான்சிஸ் சேவியர், ஜான் வெஸ்லி ஆகிய நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### நெல்லையில் சட்டப் பேரவை பொது கணக்குக் குழு தலைவர்

# கு.செல்வப் பெருந்தகையிடம் கோரிக்கை மனு!

## நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் வழங்கினார்!

நெல்லை.நவ.22-

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டப்பேரவை பொது கணக்கு குழு தலைவரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவருமான கு.செல்வப்பெருந்தகை தலைமையிலான குழுவினர் 13 அரசுத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

இந்நிகழ்வின் போது நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி. எம்.மைதீன் கான், சட்டப் பேரவை பொதுக் கணக்கு குழு தலைவர் கு.செல்வப் பெருந்தகையிடம் கொடுத்துள்ள கோரிக்கை மனுவில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மாநகரத்தின் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக உள்ள பாளையங்கோட்டைதிருவனந்தபுரம் சாலையில் உள்ள இரயில்வே மேம்பாலத்தில் Y வடிவில் அமைக்க நெடுஞ்சாலைத்துறை பரிசீலனை செய்வதாக கடிதம் வந்த நிலையில், அதனை நிறைவேற்றி விரைந்து பணிகளை துவக்க வேண்டும்.

நெல்லை மற்றும் பாளையங் கால்வாயில் குடியிருப்பு பகுதிகளில் சிமெண்ட் லைனிங் அமைத்து தர வேண்டும்,என்ற விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கை உள்ள நிலையில் குடியிருப்பு பகுதிகளில் குப்பைகள் மற்றும் கட்டிட கழிவுகளை கொட்டாத வகையில் இரும்பு வேலி அமைத்து கால்வாயை பாதுகாத்து தர வேண்டும்.

நெல்லை தொகுதியில் தாழையூத்து முதல் டக்கரம்மாள்புரம் வரையிலான 32 கிலோமீட்டர் மேற்கு புறவழிச் சாலை தமிழக முதலமைச்சர் அவர்களால் முதல் கட்டமாக 12 கிலோ மீட்டருக்கு ரூபாய் 110 கோடி ஒதுக்கப்பட்டு திருநெல்வேலி நெடுஞ்சாலை திட்டப்பணிகள் மூலம் முதல் கட்ட பணிகள் நடந்து வருகிறது.

அந்தப் பணிகள் துரிதப் படுத்தி விரைந்து முடித்திட வேண்டும்.

நெல்லை டவுண் எஸ்.என்.ஹை ரோடுக்கு இணையான புறவழிச்சாலை நயினார்குளம் பகுதிகளில் இருந்து ஸ்ரீபுரம் வரை புதிய சாலையை உருவாக்க ஆரம்ப கட்ட பணிகளை துவக்க திட்ட மதிப்பீடு தயாரித்து பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

மாநகர பகுதிகளில் போக்குவரத்து நெருக்கடியை தீர்ப்பதற்காக பாளையங்கோட்டை தெற்கு புறவழிச் சாலையில் இருந்து நேருஜி கலையரங்கம் வரையிலான புதிய சாலையை நீண்ட காலமாக பரிசீலனையில் உள்ள நிலையில் அந்தப் பணிகளை திட்ட மதிப்பீடு தயாரித்து துவக்க வேண்டும்.

வண்ணார்பேட்டை வடக்கு புறவழிச் சாலையில் உள்ள தாமிரபரணி ஆற்றில் குறுக்கே உள்ள பழைய பாலம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த மழை வெள்ளத்தால் ஆற்றின் நீர் பாலத்தை தாண்டி ஓடியது.புதிய பாலம் கட்டுமானப் பணி நடந்துவரும் நிலையில் அந்தப் பாலத்தை சில அடிகள் உயரமாக அமைத்து தர வேண்டும்.

இவ்வாறு அவர் மனுவில் தெரிவித்துள்ளார்.



நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 2011 – 2024 அன்று சட்டப்பேரவை பொது கணக்கு குழு தலைவர் கு.செல்வப் பெருந்தகை, மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப கார்த்திகேயன்,குழு உறுப்பினர்கள் அக்ரி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி (போளூர்) கோ.ஐயப்பன் (கடலூர்)சந்திரன் (திருத்தணி)சேகர் (பரமத்தி வேலூர்) சட்டப்பேரவை சார்பு செயலாளர் பாலசீனிவாசன் ஆகியோர் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்கள். உடன் நெல்லை மக்களவை உறுப்பினர் ராபர்ட் புரூஸ், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மாநகர காவல் துணை ஆணையாளர் அனிதா, மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா உள்பட அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தேனி தெற்கு மாவட்டம் சார்பாக கழக மாநில இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சின்னமனூர் தனியார் மண்டபத்தில் மாவட்டச் செயற்குழு கூட்டம் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் , கம்பம் தொகுதி பார்வையாளர் ஜெயன், ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.